# அநுராதபுர மா நகர சபை

## அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 16 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அநுராதபுர மா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) 2014 ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்த மற்றும் 2013 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த சொத்துக்களின் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 17,887,500 இனை மூலதன செலவீட்டிற்கான அரசின் உதவுத்தொகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டும் எனினும் திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றுக்கொண்ட பொறியும் பொறித் தொகுதியினதும் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 31,244,000 இற்கான மூலதனச் செலவு ஒன்றெனக் கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மிகை அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆண்டின்கான நிதிக் கூற்றுக்களில் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் பட்டோலையில் காட்டப்பட்டிருந்த டபள் கப் வண்டியின் பெறுமதி ரூபா 6,390,000 தொகை எனினும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அவை ரூபா 390,000 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2010,2011,2013 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வுக் கட்டணம் ஆகிய ரூபா 3,184,089 தொகையினை 2014 ஆண்டு வரை செலுத்துவதற்

நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 2014 ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) பதவியணிக் கடன் பட்டோலையின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் மீதி ரூபா 9,231,170 தொகை எனினும் ஐந்தொகையில் ரூபா 9,593,230 தொகை என காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 5 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் தொடர்புடைய பட்டோலைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகள் இடையே ரூபா 761,369 இற்கான வித்தியாசம் காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மா நகர சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 50,146,300 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 10,061,546 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---

2.2.1 நீதி மன்றத் தண்டப் பணம்

---

2014 ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் நீதி மன்றத் தண்டப் பணப் பதிவேடு 2014 ஆண்டிற்கான நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை.

2.2.2 முத்திரைக் கட்டணம்

---

2013 மற்றும் 2014 ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டணம் வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் முத்திரைக் கட்டணப் பதிவேடு நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------------

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571(2) இன் பிரகாரம் 2 வருடங்களை மிகைத்த வைப்புக்களை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் 2010,2011 மற்றும் 2012 ஆண்டுகளுக்கான வருமானத்திற்கு செலவு வைக்கப்படாத காலங் கடந்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 2,244,156 ஆகும்.

(ஆ) இலங்கைக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் xix பிரிவு 6 மற்றும் 1978 இன் 42 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் (உரிமையை மீளப்பெறல்) சட்டத்தின் பிரிவு 03(1) இன் பிரிவின் பிரகாரம் கடமையாற்றிவிட்டு ஓய்வுபெற்ற அல்லது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்களுக்கு வழங்கியிருந்த உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களை திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் சபைக்கு சொந்தமான 18 வீடுகள் தொடர்பாக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(அ) மற்றும் பிரிவு 254 இன் பிரகாரம் 1968 இன் 14 இலக்கம் கொண்ட சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கருமங்களுக்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் அல்லது தங்குமிடங்களில் இருந்து அந் நிறுவனங்களின் முன்னைய ஆண்டிற்கான பெறுவனவுகளில் இருந்து நூற்றிற்கு 1 ஐ மிகைக்காத வரி ஒன்று அறவிடப்பட வேண்டும். எனினும் அதன் பிரகாரம் செயற்டாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) 2002 நவம்பர் 28 திகதி IAI/2002/02 கொண்ட திறைச் சேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) அகக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) களஞ்சிய கட்டுப்பாடு